DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -12

| | | |
|---|---|---|
| Name | : திரு. பழனிவேல் | Caste: |
| Father's Name: | திரு.பெருமாள் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 8th day of June - 2023.

A1 and A3 to A6 Present.

**08.06.2023. முதல் விசாரணை**

நான் சேலம் அரியானூரில் வசித்து வருகிறேன். அ.சா.10 மாதவி எனது தம்பி மனைவி. தம்பியின் பெயர் ராமு. ராமு குமார் ஹோட்டல் என்ற பெயரில், அரியானூரில் உணவகம் நடத்தி வந்தார். அவர் இறந்ததிற்கு பிறகு அந்த உணவகத்தை அ.சா.10 நடத்தி வருகிறார். நான் அந்த கடையில் சைடு மாஸ்டராக வேலை செய்கிறேன். ஆஜர் 1 ஆம் எதிரியை தெரியும். அவர் எங்களது உணவகத்திற்கு அடிக்கடி சாப்பிடுவதற்கு வருவார்.

விஜயன் என்பவர் கொலை செய்யப்பட்டுவிட்டார். கடைக்கு வருபவர்கள், போவர்கள் சொல்லி 1 ஆம் எதிரி விஜயனை கொலை செய்ததாக கேள்விபட்டேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். சுந்தரமூர்த்தி எங்களது உணவகத்திற்கு வந்து சாப்பிட்டு விட்டு அதற்குபின்னர் தான் சென்று கொலை செய்தாரா என்று ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதுபற்றி எனக்கு தெரியாது என்று சொல்லிவிட்டேன். வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

ஆய்வாளர் விசாரணையின் போது 1ஆம் எதிரி சம்பவத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு இருந்து 3 முதல் 5 பேருடன் அடிக்கடி எங்களது உணவகத்திற்கு சாப்பிடுவதற்காக வருவார் என்றும், அந்த நபர்கள் 25 முதல் 30 வயது மதிக்கத்தக்க வெளியூரை சேர்ந்தவர்கள் என்றும், 01.09.2014 அன்று இரவு 7 முதல் 8 மணிக்குள்ளாக 1ஆம் எதிரி அவருடன் அடிக்கடி வந்துசெல்லும் நான்கு நபர்களை அவருடன் கூட்டிவந்து எங்களது கடையில் சாப்பிட்டுவிட்டு ஏதோ பேசிக்கொண்டிருந்துவிட்டு, சென்றதாகவும், 11.11.2014 அன்று 1ஆம் எதிரியும், அவரது கூட்டாளிகளும் இந்த கொலை வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் சரணடைந்துவிட்டதாக கேள்விப்பட்டதாகவும், சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

மேலும் போலிசர் விசாரணையில் நான் 01.09.2014 அன்று 1ஆம் எதிரி அவருடன் வந்த நான்கு நபர்களுடன் எங்களது கடையில் சாப்பிட்டு கொண்டிருந்தபோது இன்னைக்கு எப்படி இருந்தாலும் விஜயனை தீர்த்துக்கட்டினும் அப்பத்தான் நான் நிம்மதியாக இருக்க முடியும் என்று 1ஆம் எதிரி அவரின் கூட்டாளிகளிடம் சொன்னதாகவும், அதற்கு அவர்கள் ஒன்றும் கவலைப்படாதே இன்னைக்கு கட்டாயமா விஜயனை தீர்த்துக்கட்டிலாம் என்று சொன்னதாகவும், பின்னர் அவர்கள் அங்கிருந்து சென்றுவிட்டதாகவும், நான் பயந்து கொண்டு எதிரிகள் பேசிக்கொண்டிருந்ததை யாரிடமும் சொல்லாமல் இருந்துவிட்டதாகவும், அதனால் தான் 16.11.2014 தேதியன்று ஆய்வாளர் விசாரித்த போது மேற்படி சங்கதியை சொல்லமல் இ ருந்துவிட்டு 20.04.2015 அன்று விசாரணையின் போது சொன்னதாகவும், வாக்குமூலம் கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் போலிசர் விசாரணையில் உண்மை சங்கதிகளை சொல்லிவிட்டு தற்போது 1ஆம் எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

Sd/- **G. Sri Rama Jeyam,**

III Additional District Judge,
Salem.